# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத் திங்கள் 26–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.34/2019 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 09/2025**

**A. சண்முக சந்தரம்** **...மனுதாரர்/01–ஆம் பிரதிவாதி.**

**–எதிர்–**

**01. U. தனபால் (இறந்து விட்டார்)**
**02. U. மாணிக்கம்**
**03. சுபத்ரா**
**04. கவிதா**
**05. திலகா** **...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.J.பெரோஸ்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.A.திருநாவுக்கரசு** அவர்களும் தோன்றினர். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

### முகவுரை

எதிர்வழக்குரை தாக்கல்செய்தபோது அத்துடன் தாக்கல்செய்யப்படாத ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது தாக்கல்செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 1(A)3-ஆம் விதியின்கீழ் இந்த மனு மனுதாரர்/01-ஆம் பிரதிவாதியால் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

III rd ADJ Court, Salem

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் 01-ஆம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினைக்காக முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர். பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு நிலுவை யில் இருக்கிறது. இந்த மனுவுடன் தாக்கல்செய்யப்படும் ஆவணங்கள் இந்த வழக்கை அறுதியாக முடிவுசெய்யத் தேவையானவை. அவற்றை தற்போது தான் தேடிக் கண்டுபிடிக்க முடிந்தது. வாதி தரப்பு 01 ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்தபோதே மேற்சொன்ன ஆவணங்கள் மனுதாரர்/01 ஆம் பிரதிவாதிக்கு கிடைக்கவில்லை. அந்த ஆவணங்களை தற்போது சாட்சியத்தில் தாக்கல்செய்வதற்காக முன்னிடுவதற்கு மனுதாரர்/01-ஆம் பிரதிவாதிக்கு அனுமதி வழங்க வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

02. ஆவணங்களை காலதாமதமாக தாக்கல்செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கோராமல் காலதாமதத்தை மன்னிக்க வேண்டும் என்ற விவரம் மனுவில் கோரியிருப்பது தவறு. தற்போது தாக்கல்செய்ய முற்படும் ஆவணங்களை ஏன் எதிர்வழக்குரையுடன் அல்லது வழக்கின் முந்தைய நிலையில் தாக்கல்செய்யவில்லை என்பதற்கு மனுதாரர் சொல்லி யுள்ள காரணம் ஏற்புடையதல்ல. மனுவில் கண்டுள்ள 03-ஆம் ஆவணம் 02-ஆம் வாதி மற்றும் அவருடைய மகன் பெயரிலும் 04-ஆம் ஆவணம் கார்த்திகேயன் மற்றும் மேனகா பெயரிலும் 05-ஆம் ஆவணம் 02-ஆம் பிரதிவாதியின் பெயரிலும் உள்ளதாக மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதி பொய். 05-ஆம் ஆவணம் சம்மந்தமாக எதிர்வழக்குரையில் எதுவும்

சொல்லப்படவில்லை. தற்போது மனுதாரர் மனுவுடன் ஆவணம் எதுவும் வழக்குச் சொத்தோடு முன்வைக்கப்படவில்லை. ஆகையால், இந்த மனுவை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

03. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**04.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. எதிர்வழக்குரையின் 07-ஆம் பத்தியில் தற்போது இந்த மனுவுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் விபரம் சொல்லப்பட்டுள்ளது. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர்/ வாதி பாகப்பிரிவினை கோரியுள்ள நிலையில் பாகப்பிரிவினை உரிமையை மறுக்க பிரதிவாதிகள் நுட்பமான எதிர்வாதமாக இந்த மனுவுடன் சொல்லப் பட்டுள்ள ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களும் கூட்டுக் குடும்ப சொத்துக்கள்தான் என்றும் அவற்றை வழக்கில் சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்வாதம் முன்வைத்துள்ளார். எதிர்மனுதாரர்கள் சொல்வதுபோன்று சில ஆவணங்கள் 01-ஆம், 02-ஆம் வாதிகள் பெயரில் காப்பாளர் என்ற முறையில் பதிவாகி உள்ளன.அந்த ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் வழக்குச் சொத்துக்கள் இல்லை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அந்த நோக்கத்திற்காக மனுதாரர்/பிரதிவாதி அந்த ஆவணத்தை முன்னிடவில்லை. இந் நிலையில் இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/

வாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது. ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

05. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V
Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.02.09 18:13:38 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem